**வவுனியா மாநகர சபை – (2023/03/19 – 2023/12/31)**

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியா மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான் ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வவுனியா மாநகர சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுத்துவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக ரூபா 23,868,064 ஆன 19 வேலைத்திட்டங்களானது நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் மதிப்பீடுகள், உடன்படிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் அடிப்படையில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் சில்லறைக்கடன்கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த மையினால் நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது. | கடன் கொடுநர் ஒதுக்கங்களுக்காக உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு குறித்த வேலைகளின் பெறுமதி செலவீனமாக நிதியாண்டு முடிவில் குறித்த மூலதன செலவீனத்தில் வரவு வைக்கப்பட்டு சில்லறை கடன் கொடுநர் கணக்கிற்கு ஒதுக்கமாக மாற்றப்பட்டிருந்ததாக. | உண்மை பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான 19 வீதிகளுக்கு செம்மண் இடப்பட்டமை தொடர்பில் ஏற்பட்ட பராமரிப்புச் செலவு ரூபா 9,586,114 மூலதன செலவினமாகக் கணக்கீடு செய்தமையால், மூலதனச் செலவினத் தொகை இப் பெறுமதியினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 19 வீதிகளின் கிரவலிடல் செலவு ரூபா 5,478,930 மூலதன செலவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாக. | உரிய வகுதிகளுக்குள் தாக்கல் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நன்கொடையாக பெறப்பட்ட 27 இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,478,930 தளபாடத் தொகுதிகளின் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் இத்தொகையினால் தளபாடத் தொகுதிகளின் பெறுமதி அதிகரித்தும் பொறி இயந்திர உபகரணங்களின் பெறுமதி குறைவடைந்தும் காணப்பட்டது. | அலுவலக உபகரணங்கள், கணணிகள், ஆகியவை தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரண தொகுதியினுள் வகைப்படுத்தப்பட்டு, அதன் பிரகாரமே கணக்கீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான பழைய பஸ்தரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள பயனிகள் தரிப்பிடக் கட்டிடத்தொகுதி அகற்றப்பட்டிருந்ததுடன் இதன் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்களின் பெறுமதியில் இருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அகற்றப்பட்ட கட்டடத்தின் பெறுமதியினை விலை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தமையினால் 2024 ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்து பெறுமதியில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் உரிய முறையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | உரிய கால ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

**1.5.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 16 காணிகளுக்கான காணி உரிமைப் பத்திரச் சான்றுகள் மற்றும் வரலாற்றுத் தாள்கள் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபைக்குரித்தான 16.17 ஹெக்ரேயர் விஸ்தீரணமுடைய 26 காணிகளுக்குரிய பாரதீனப்படுத்தல் கட்டளைகளை பெற்றுக்கொள்வதற்கான தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றதாக. | கணக்காய்விற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் பொறுப்புக்கள் மீதி ரூபா 1,642,862,542 இனை செவ்வை பார்க்க பிரதான பதிவேடு மற்றும் பொதுநாட் குறிப்பு பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் பெரும்பாலான செயற்பாடுகள் கணணிமயப்படுத்தப்பட்டுள்ளமையி னால், பிரதான பதிவேட்டிலுள்ள விடயங்கள் கணணி ஊடாகவே நிறைவேற்றப்பட்டு வருகின்றதாக. | -மேற்படி- |
| (இ) | நிதி நிலமைக்கூற்றில் 2023 திசெம்பர் 31 இல் மூன்று வருமானத் தலைப்புக்களின் கீழ் இனங்காணப்பட்ட நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 39,881,237 இனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு தனிநபர் நிலுவை பட்டியல், நிலுவைகளின் காலப்பகுப்பாய்வு, நிலுவைப் பதிவேடு. போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபைக்குரிய நிதிக்கூற்றுக்கள் குறுகிய காலப்பகுதியினுள் சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு காணப்பட்டமையினால் குறித்த உறுதிப்படுத்தல்கள் சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதாக. | -மேற்படி- |

**1.6 இணங்காமைகள்**

**1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | தொகை | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், (அத்தியாயம் 252 ) | | | | |
| (i) 155 பிரிவு | - | சபைக்குச் சொந்தமான 304 கடையறைகளுக்கு அறவிடப்படும் வாடகைக் கட்டணம் மற்றும் 95 | 255 கடைகளுக்கு 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விலை மதிப்பீடு செய்யப்பட்டு | சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நிலங்களுக்கு அறவிடப்படும் குத்தகைக் கட்டணம் காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய விலை மதிப்பீட்டு பெறுமதிக்கமைவாக வாடகை அறவீடு செய்யப்பட்டிருந்ததாக. | |
| | (ii) 252 பிரிவு | 34,082,765 | ஆதனவரியினை செலுத்தாத ஆதன உரிமையாளர்களுக்கெதிராக எழுத்திலான அறிவித்தலொன்றினை விடுத்து அறவிட வேண்டிய பணத்தை அறவிட அல்லது ஆதனத்தை தடை செய்து கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 31.12.2024ற்கான இறுதி கணக்குகளில் காட்டப்பட்டவாறான நிலுவைகள் ரூபா 32,707,191 ல் இதுவரை ரூபா. 8,244,934 நிலுவைகள் அறவீடு செய்யப்பட்டுள்ளதாக. | -மேற்படி- |
| (ஆ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடு | - | ஆதனவரி அறவிடுவதற்காக மாநகர சபையின் அதிகார பிரதேசத்திலுள்ள அசையாத ஆதனங்களை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தும் 2009 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 15,340 எண்ணிக்கையிலான ஆதனவரி அலகுகளினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | 2024 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்திருந்தமையினால் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து புதிய விலை மதிப்பீட்டு ஆதனங்களின் புதிய பெறுமதியின் அடிப்படையில் ஆதன வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக. | ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (இ) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 26/92 | - | மாநகர சபைக்குச் சொந்தமான வாகனங்களில் மாநகர சபையின் சின்னத்தை காட்சிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபையின் சின்னத்தினை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றதாக. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| (உ) | திறைசேரி செயலாளரின் 2018 மார்ச் 19 ஆம் திகதிய 01/2018 இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 02(அ) | - | 05 தொடக்கம் 10 வருடங்களுக்கு மேலாக பயன்பாட்டில் இல்லாத சாலைக்கு தகுதியற்ற 10 வாகனங்களை அப்புறப்படுத்த மாநகர | தற்போது மீளவும் ஏலம் கோரும் பொருட்டு மற்றும் உதரிப்பாகங்களாக விற்பனை செய்வதற்குரிய விலை மதிப்பீடு செய்யும் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக. |

**2.** **நிதி மீளாய்வு**

**2.1** **நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக சபையின் வருமானத்தினை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 59,851,921 ஆக இருந்தது.

**2.2** **வருமான நிருவாகம்**

**2.2.1** **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வ காலப்பகுதிக்கான தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை..

**2.2.2 வருமானங்களை சேரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரிகள்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 24,462,256 வீதவரி நிலுவையானது 02 தொடக்கம் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட மீதியாக காணப்பட்டிருந்தது. | 31.12.2024ற்கான இறுதி கணக்குகளில் காட்டப்பட்டவாறான நிலுவைகள் ரூபா 32,707,191ல் இதுவரை ரூபா. 8,244,935 நிலுவைகள் அறவீடு செய்யப்பட்டுள்ளதாக. | நீண்ட கால நிலுவைகள் அறவீடு செய்யப்படல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகைகள்** | | |
| (i) | சபைக்கு சொந்தமான ஆதனங்களின் குத்தகை வருமான நிலுவை ரூபா 733,217 இனை கடந்த 02 தொடக்கம் 10 வருடங்களாக அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் ரூ.733,217 இனை அறவீடு செய்தல் தொடர்பில் இணக்க சபை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | -மேற்படி- |
| (ii) | சபைக்கு சொந்தமான 304 கடைகள் மற்றும் 95 காணிகளுக்கான நில வாடகை ஒப்பந்த காலம் நிறைவடைந்து 01 தொடக்கம் 33 வரையான வருடங்கள் கடந்த நிலையிலும் உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இலக்கம் 1980/46 இன் பந்தி 7 இற்கு இணங்க மீள | 336 கடைகள் மற்றும் 95 நிலங்கள் உட்பட மொத்தமாக 431 வாடகைதாரர்களுக்கும் வெவ்வேறு திகதிகளில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால், ஒப்பந்த திகதிகளை | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரே திகதிக்கு மாற்றுவதன் பொருட்டு 170 பெயர் மாற்றம் செய்து ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கான கோரிக்கைகளும் கிடைக்கப்பெற்றிருந்தது. | |
| (இ) | **அனுமதிப் பத்திரக் கட்டணம்** | | |
| (i) | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(அ) இன் படி மீளாய்வாண்டிற்கான வர்த்தக உரிமங்கள் தொடர்பான முறையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாது வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இத்தகைய அனுமதிப் பத்திரங்கள் இன்றி செயற்படும் வர்த்தக நிறுவனங்களுக்கெதிராக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(6)4 இன் பிரகாரம் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி வர்த்தக உரிமங்களை பெற்றுக்கொள்ளாது செயற்படுவோருக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | சட்டத்துடன் இணங்குதல் வேண்டும். |
| (ii) | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 267 இன் படி விளம்பரப்பலகை தொடர்பான உரிமங்களை வழங்குவதற்கு முறையான நடைமுறை பின்பற்றப்படாது கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் மேலதிக விளம்பரப் பலகை அனுமதிப் பத்திரக் கட்டணமாக ரூபா 1,735,100 கணிப்பீடு செய்யப்பட்டிருந்தும் இதனை அறவீடு செய்வதற்கோ கணக்குகளில் கொண்டுவருவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | 2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விளம்பர கட்டணங்களை முழுமையாக அறவீடு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதுடன், அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாதுள்ள விளம்பர பலகைகள் தொடர்பில் மாநகர கட்டளை சட்டத்திற்கிணங்க தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக | -மேற்படி- |
| (iii) | மாநகர சபையின் அதிகார வரம்பிற்குள் 01 தொடக்கம் 10 வருடங்களுக்கு முன்னர் சுற்றுச்சூழல் அனுமதி பெற்ற 33 வணிகங்களில் தற்போது அனுமதி தேவைப்படும் வணிகங்களை அடையாளம் காண முறையான கணக்கெடுப்பு நடத்தப்படாததால் மாநகர சபையின் அதிகார வரம்பிற்குள் எத்தனை வணிகங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி தேவைப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. | தற்போது சுற்றுச்சூழல் அனுமதியினை பெற வேண்டிய தேவைப்பாடுடைய வணிகங்கள் அடையாளம் காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 03 வருடத்திற்கு ஒருமுறை சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டிய தேவைப்பாடுடைய வணிகங்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றது | சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையாக மீள் உருவாக்கம் செய்யப்பட்ட 2023 மார்ச் 18 தொடக்கம் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு சபையினால் பாதீடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நகர சபைக்குரிய பாதீட்டிற்கமைவாகவே அனைத்து நடவடிக்கைகளும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றிருந்ததாக. | உரிய காலத்தில் பாதீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் உழைக்கப்பட்ட வருமானத்தில் இருந்து ரூபா 3,000,000 சபைத் தீர்மானம் மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானமின்றி அபிவிருத்தி ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | சபையின் 21.02.2024 ஆம் திகதிய 17 ஆம் இலக்க முகாமைத்துவ குழு கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்கான வருமான மிகையான ரூபா 30 மில்லியனை அபிவிருத்தி ஒதுக்க கணக்கிற்கு மாற்றுவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததாக. | அனுமதி பெற்ற பின்னர் மாற்றப்படல் வேண்டும். |
| (இ) | நகர சபைக்கு சொந்தமான 7 பேர்ச் விஸ்தீரணம் உடைய காணியை தனிநபர் தன்னிச்சையான முறையில் ஆக்கிரமித்து தொழில்நிலையம் நடாத்தி வருகின்ற போதும் நகரசபை கட்டளைச்சட்டம் 255 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த காணியினை நில அளவை திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் ஊடாக எல்லைப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவடைந்ததும் குறித்த காணி தொடர்பில் தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பவற்றின் சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டில் சபையினால் ஆதன வரி அறவிடப்படும் 11,372 ஆதனங்களில் 397 ஆதனங்களுக்கு சபையினால் K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | படிவத்தின் பெயர் மற்றும் தற்போது வசிக்கும் நபர்களின் பெயர்களிடையே வேறுபாடொன்று காணப்படுவதுடன் அவை விநியோகிக்ப்பட வில்லை என்பதாக. | K படிவம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 7,230,939 செலவில் நிர்மாணிக்கப்பட்ட வவுனியா குளம் சுற்றுலா மையமானது நபர் | குத்தகைதாரர் ஒப்பந்தத்தினை மீறி சபையின் அனுமதி பெறாது மேலும் கட்டுமானங்களை அமைத்தமையால், நகர சபையானது குத்தகையாளருக்கு எதிராக, மாவட்ட நீதிமன்றத்தில் | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் குத்தகைதாரரினால் அதனை 04 வருடங்களிற்கு மேலாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்படாமல் காணப்பட்டிருந்து. அத்துடன் குத்தகை வைப்புப் பணம் உள்ளடங்கலாக ரூபா 277,000 தொகை மாத்திரமே அக்குத்தகைதார்ரிடமிருந்து வருமானமாக இதுவரைக்கும் சபையினால் அறவிடப்பட்டிருந்தது. | வழக்கு இடம்பெற்று வருகின்றது. இதனால் இக்குத்தகை நிலையம் தொடர்பில் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியவில்லை என்பதாக. | |
| (ஊ) | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்காக இடைக்கால சட்டமொன்று இயற்றப்பட்டிருக்கவில்லை. | இடைக்கால சட்டம் இயற்றுவது தொடர்பில், எதிர்வரும் சபைக்கூட்டங்களில் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | உரிய சட்டம் உருவாக்கப்படல் வேண்டும். |
| (எ) | மாநகர சபைகளின் பிரதான பணிகளில் ஒன்றாக கழிவு முகாமைத்துவ செயற்பாட்டிற்கு சபையில் நீண்டகால வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகள் கொட்டப்படும் பம்பைமடு திண்மக்கழிவகற்றல் இடமானது வவுனியா தமிழ் பிரதேச சபைக்குரிய காணியாகும். சமூக மட்டத்தில் இவ்விடம் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளமையினால் இவ்விடத்தினை மாற்ற வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது. ஆகவே இவ்வாறான இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெற்றுக் காணிகளுக்கான குத்தகை உடன்படிக்கையின் பிரிவு 04 இன் பிரகாரம் சபையின் முன் அனுமதியின்றி குத்தகைக்கு பெற்ற குறித்த காணிகளில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக் கட்டளைச் சட்டத்திற்கு முரணாக குத்தகைதாரரால் நிரந்தரக் கட்டடம் எதுவும் கட்ட முடியாது எனினும் மேற்படி உடன்படிக்கைக்கு முரணாக குத்தகைக்கு வழங்பட்ட 95 காணிகளில் குத்தகைக்கு பெற்றோரால் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் | மாநகர சபையின் VMC/2025/09/03/32 ஆம் இலக்க 29.08.2025 ஆம் திகதிய சபைக்கூட்ட தீர்மானத்திற்கிணங்க, மாநகர சபையால் வழங்கப்பட்ட 95 ஆதனங்களில் அனுமதியன்றி அமைக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் தொடர்பாக, குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன் ஊடாக நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 42A இற்கு அமைவாக எடுக்க வேண்டிய எதுவித நடவடிக்கைகளும் இற்றைநாள் வரை மாநகர சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அத்துமீறிய கட்டுமானங்களை இனங்காணுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று இல்லாதிருந்ததுடன் மக்களின் முறைப்பாடுகளில் அடிப்படையில் மாத்திரம் அத்துமீறிய கட்டுமானங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவ்வாறே அத்துமீறிய கட்டுமானங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றும் சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் நகர சபை வெளிக்கள உத்தியோகத்தர்களால் வட்டார ரீதியாக கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு அனுமதியற்ற கட்டுமானங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக. | உரிய பதிவேடுகள் பேணப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட 58 அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களுக்கான இணக்கச் சான்றிதழ் சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இணக்க சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு கோரி கடிதம் அனுப்பப்பட்டு வருகின்றது. கால அவகாசம் நிறைவடைந்ததும் இணக்க சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளாதோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. | இணக்கச்சான்றுகள் வழங்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சபையின், மாநகர எல்லையினுள் பதிவு செய்யப்பட்டு செயற்பாட்டில் காணப்படாத 02 சனசமூக நிலையங்களை செயற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சனசமூக நிலையங்களுக்குரிய கூட்டங்களை நடாத்துவதற்குரிய ஒழுங்குகள் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | சுனசமூக நிலையங்கள் இயக்கப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் 02 உழவு இயந்திரங்கள், 11 உழவு இயந்திர இளுவை பெட்டிகள், 03 டிப்பர் வாகனங்கள், 04 கலி பவுசர்கள், ஒரு பெக்கோ லோடர் மற்றும் ஒரு இரண்டு சக்கர உழவு இயந்திரம் என்பனவற்றை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களை பாவனையில் ஈடுபடுத்துவது தொடர்பில் சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக வருமானங்கள் செலவுகள் தொடர்பாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை ஆதலால் குறித்த காலப்பகுதிக்கான உண்மை வருமானம், உண்மை செலவினம் தொடர்பான வருமான செலவின வேறுபாடுகளை ஒப்பிடக்கூடிய ஏதுநிலை காணப்படவில்லை. | ஆணையாளர் நியமனம் மற்றும் உறுப்பினர் தெரிவு ஆகிய அடிப்படை தேவைப்பாடுகள் எவையும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காத காரணத்தினால் மாநகர சபைக்குரிய நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்குரிய ஏது நிலைகள் 2023 ஆம் ஆண்டில் காணப்படாத காரணத்தினால், நகர சபைக்குரிய நிதிக்கூற்றுக்களே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நகர சபைக்குரிய பாதீட்டிற்கமைவாகவே அனைத்து நடவடிக்கைகளும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றிருந்தது | பாதீடு கட்டாயம் தயாரிக்கப்படல் வேண்டும். |